DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 57/2026

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | நந்தகோபால் |
| Father / Husband Name | கதிர்வேல் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 10.07.2026

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கடந்த 8 ஆண்டுகளாக கருங்குழியில் மாட்டுத்தீவனம் தொழில் செய்கிறேன். என்னுடைய தொழில் எப்படிப்பட்டது என்றால் ரைஸ் மில்லில் இருந்து நெல்லின் பதரை வாங்கி மாட்டுத்தீவனம் தயாரிக்க சேலத்திற்கு அனுப்பிவைப்பேன். என்னுடைய தொழிலுக்கு அரசு அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. நான் என்னுடைய தொழிலின் மூலம் வரும் வருமானத்தை வங்கி கணக்கு மூலம் பரிவர்த்தனை செய்கிறேனா என்றால் வங்கி மூலமும் பரிவர்த்தனை செய்கிறேன், சில நேரங்களில் ரொக்க தொகையாகவும் பெற்றுக்கொள்கிறேன். நான் மேற்கண்ட தொழில் செய்வதற்கு தற்போது வரை அரசாங்கத்திற்கு எவ்வித வரியும் செலுத்தவில்லை என்றால் சரிதான். எதிரியை எனக்கு யார் மூலமாக எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் என் மனைவியின் அக்காவின் கணவர் தண்டபாணி என்பவர் மூலம் தெரியும். அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் விழுப்புரம் மாவட்டம், மரக்காணத்தை சேர்ந்தவர். எதிரியை என்னிடம் பணம் வாங்க வரும்போது தான் தெரியும்.

2. என்னிடம் பணம் உள்ளது என்று எதிரிக்கு எவ்வாறு தெரியும் என்றால் எதிரி தண்டபாணியிடம் கேட்டுள்ளார். நான் ஏற்கெனவே தண்டபாணிக்கு பணம் கொடுத்து வாங்குவது வழக்கம், அந்த அடிப்படையில் தண்டபாணி என்னிடம் பணம் கேட்டார். நான் தருவதாக சொன்னதால் அவர் எதிரியை அழைத்துவந்தார். என்னிடம் தண்டபாணி தான் கடன் கேட்டார் என்றாலும், எதிரி நேரடியாக பணம் கேட்கவில்லை என்றாலும் சரிதான். ஆனால் தண்டபாணி எதிரிக்காக தான் பணம் கேட்டார். எதிரியை எனக்கு நேரடியாக பழக்கம் இல்லை என்பதையும், தண்டபாணி தான் பணம் கேட்டார் என்பதையும் என்னுடைய புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான், அவ்வாறு சொல்லவேண்டிய அவசியம் இல்லை. எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என்றால் 12.02.2025 அன்று தொலைப்பேசியில் பணம் கேட்டார்கள், 13.02.2025 அன்று பணம் கொடுத்தேன்.

3. 12.02.2025 அன்று எத்தனை மணிக்கு யாருடைய தொலைப்பேசியில் இருந்து கடன் கேட்டு எனக்கு போன் வந்தது என்றால் தண்டபானியின் போனில் இருந்து தான் அழைப்பு வந்தது. ஆனால் எத்தனை மணிக்கு வந்தது என்று சரியாக ஞாபகமில்லை. 3 லட்சம் ரூபாய் பணத்தை எந்த தேதியில் எங்கு வைத்து எவ்வாறு கொடுத்தேன் என்றால் 13.02.2025 அன்று என் வீட்டில் வந்துதான் பணம் வாங்கினார்கள், நான் பணத்தை எதிரியிடம் தான் கொடுத்தேன். அப்போது தண்டபானி உடன் இருந்தார். கடன் கொடுக்கும்போது நான் எதிரியிடம் என்ன ஆவணம் வாங்கினேன் என்றால் அப்போது எந்த ஆவணமும் வாங்கவில்லை, அவர் ஓர் இரு மாதத்தில் திருப்பி கொடுத்துவிடுவதாக சொன்னார். நான் தண்டபானி மீதுள்ள நம்பிக்கையில் தான் எதிரிக்கு ரூ.3 லட்சம் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த பணத்திற்கு தண்டபானி தான் பொறுப்பு என்று தான் நான் பணம் கொடுத்தேன் என்றால், எதிரி பணத்தை திருப்பி தருவதாக உறுதியளித்தார்.

4. யார் என்றே தெரியாத எதிரிக்கு தண்டபானி அளித்த நம்பிக்கையின் பேரில் தான் நான் பணம் கொடுத்தேன் என்றால் அவர் மீது உள்ள நம்பிக்கையிலும் கொடுத்தேன், எதிரியும் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாக சொன்னதால் கொடுத்தேன். எதிரி இறால் பண்ணைக்கு மெஷின் தயார் செய்யும் தொழில் செய்வதாக சொன்னார். நான் என்னுடைய வங்கி கணக்கின் காசோலைகள் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். நான் யாருக்காவது காசோலை கொடுத்துள்ளேனா என்றால் என்னுடைய பெயரில் (Self) காசோலை பயன்படுத்தியுள்ளேன். நான் காசோலையை பயன்படுத்தும்போது என்னுடைய வங்கி கணக்கின் பட்டியலில் தெரியவரும் என்றால் சரிதான். நான் என்னுடைய வங்கி கணக்கின் ஸ்டேட்மென்ட்டை எடுத்து பார்த்துள்ளேனா என்றால் எப்போதாவது எடுத்து பார்ப்பேன். நான் கொடுத்த 3 லட்சம் ரூபாய்க்கு ஆண்டிற்கு 24 சதவீதம் வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாக என்னுடைய புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

5. நான் எதிரியிடம் இருந்து எத்தனை மாதம் வட்டி வாங்கினேன் என்றால் அவர் வட்டி பணம் எதுவும் தரவில்லை. நான் ஏன் வட்டி தொகை தரவில்லை என்று எதிரியிடம் கேட்டேனா என்றால் நான் எதிரியிடம் கேட்கவில்லை, தண்டபானியிடம் கேட்டேன். தண்டபானியிடம் வட்டி கொடுக்க சொல்லி எப்போது எவ்வாறு கேட்டேன் என்றால் போன் மூலம் கேட்டேன். 2 மாதம் வட்டி தராதபோது போன் செய்து கேட்டேன். அப்போது எதிரி பணத்தை திருப்பி கொடுத்துவிடுவார் என்று தண்டபானி சொன்னார். இந்த சங்கதியை என்னுடைய அறிப்பு, புகார் மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறுதியாக நான் யாரிடம் எப்போது கடனை திருப்பி கேட்டேன் என்றால் தேதி ஞாபகமில்லை, தண்டபானி முன் நின்று கடன் வாங்கி கொடுத்ததால் எதிரியிடம் பணத்தை வாங்கி தரும்படி கேட்டேன். அப்போது தண்டபானி என்ன சொன்னார் என்றால் எதிரி நிலம் எதையோ விற்பனை செய்வதாகவும், ஓர் இரு மாதத்தில் திருப்பி கொடுத்துவிடுவார் என்று சொன்னார்.

6. 13.02.2025 ம் தேதி ரூ.3 லட்சம் கொடுத்தது அல்லாமல் வேறு என்ன தொகை கொடுத்தேன் என்றால் மற்றொரு முறை ரூ.3 லட்சம் கொடுத்தேன். அந்த 3 லட்சம் எப்போது கொடுத்தேன் என்றால் அதையும் 13.02.2025 அன்று தான் கொடுத்தேன். அன்று மதியத்திற்கு மேல் வந்து வாங்கிக்கொண்டு சென்றார். காலையில் 3 லட்சம் கொடுத்தேன், மதியம் 3 லட்சம் கொடுத்தேன் என்று என்னுடைய புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் தொலைப்பேசியில் 6 லட்சம் கேட்டார்கள், மறுநாள் காலையில் ரூ.3 லட்சம் கொடுத்தேன், மதியம் ரூ.3 லட்சம் கொடுத்தேன். 13.02.2025 அன்று காலையில் ரூ.3 லட்சமும், மதியம் ரூ.3 லட்சமும்

கொடுத்தேன் என்று என்னுடைய அறிவிப்பு, புகார் மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மதியம் வாங்கிய தொகைக்கு ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் அதற்கும் ஆவணம் தரவில்லை.

7. இந்த 6 லட்சம் ரூபாய் எவ்வாறு வந்தது என்பதற்கு ஆவணம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. நான் சிட்டி யுனியன் பாங்க், கனரா பாங்கில் என்னுடைய மனைவியின் நகையை வைத்து தான் தொழில் செய்கிறேன். வழக்கு காசோலையின் எண் என்ன என்றால் 601512 மற்றும் 601513. மேற்படி காசோலைகளை எதிரி எந்த தேதியில் எங்கு வைத்து கொடுத்தார் என்றால் பணம் வாங்கியதில் இருந்து 4 மாதம் கழித்து என் வீட்டிற்கு வந்து கொடுத்தார். காசேலையை ஜுலை மாத வாக்கில் கொடுத்தார். நான் காசோலையை உடனடியாக வங்கியில் செலுத்தவில்லையா என்றால் எதிரி என்னை கேட்டுக்கொண்டு போடுங்கள் என்று சொன்னார். 3 லட்சம் ரூபாய்க்கு மாதம் வட்டி எவ்வளவு வரும் என்றால் ரூ.6000/– வரும். மற்றொரு 3 லட்சத்திற்கு மாதம் ரூ.6000/– வட்டி வரும் என்றால் சரிதான். காசோலை எவ்வளவு ரூபாய்க்கு கொடுத்தார் என்றால் இரண்டு காசோலைகளையும் தலா ரூ.3 லட்சத்திற்கு கொடுத்தார்.

8. காசோலையை என்னிடம் கொடுக்கும்போது நிரப்பி தான் இருந்தது, அதை யார் நிரப்பினார் என்று நான் பார்க்கவில்லை. என்னிடம் காசோலை கொடுக்கும்போது முழுவதும் நிரப்பியிருந்தது என்றால் சரிதான். காசோலை கொடுக்கும்போது அதில் பெயர், தொகை, கையொப்பம் ஆகியவை நிரப்பப்பட்டிருந்தது. நான் கொடுத்த 6 லட்சம் ரூபாய்க்கு 4 மாதத்திற்கு உரிய வட்டியை கேட்டேனா என்றால், நான் கேட்டேன். வட்டியை தனியாக தந்துவிடுவதாக சொன்னார். வட்டியை தண்டபானி மூலம் கொடுத்துவிடுவதாக சொன்னார். காசோலை அசலுக்கு மட்டும் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், வட்டி இதுவரை வந்து சேரவில்லை என்றும் என்னுடைய அறிவிப்பு, புகார் மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தண்டபானிக்கு ஏதாவது அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு காசோலையை எந்த தேதியில் வசூலுக்கு செலுத்தினேன் என்றால் 10.11.2025.

9. நான் அளித்த அறிவிப்பிற்கு எதிரி ஒரு பதில் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பை நான் படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த பதில் அறிவிப்பில் என்னை எதிரி என்னை யார் என்றே தெரியாது என்றும், எனக்கும் அவருக்கும் இடையே எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றும் சொல்லியுள்ளார் என்றால் அவர் அவ்வாறு தான் சொல்லியுள்ளார். இடைபட்ட காலத்தில் எப்போதாவது எதிரியை நேரிலோ, வேறு எந்த விதத்திலோ தொடர்பு கொண்டு கடனை பைசல் செய்ய சொன்னேனா என்றால் இல்லை, நான் அவரை கேட்கவேண்டிய அவசியம் இல்லை. தண்டபானி தான் பணத்தை வாங்கி கொடுத்ததால் தண்டபானிடம் திரும்ப வாங்கி கொடுக்க சொன்னேன். எதிரி அளித்த பதில் அறிவிப்பில் இந்த வழக்கு காசோலைகளும், மேலும் 3 காசோலைகளும், அச்சிடப்பட்ட கடனுறுதி சீட்டுகளும், ரெவன்யூ ஸ்டாம்ப் ஒட்டப்பட்ட வெற்று தாளில் கையொப்பம் செய்தும், 2016 காலக்கட்டத்திலேயே தண்டபானியிடம் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை.

10. 2016 ல் தண்டபானியிடம் வாங்கிய கடனை எதிரி 2020–லேயே பைசல் செய்துவிட்டார் என்றாலும், அப்போது தண்டபானி இந்த காசோலைகளை திருப்பி தரவில்லை என்றாலும் சரியல்ல. நான் தற்போது கூறும் ரூ.6 லட்சம் கடன் எதிரிக்கு கொடுக்கப்பட்ட கடன் இல்லை என்றாலும், அது தண்டபானிக்கு கொடுக்கப்பட்ட கடன்

என்றாலும் சரியல்ல, நான் தண்டபானி மூலம் எதிரிக்கு தான் கொடுத்தேன். நான் எதிரிக்கு கடன் கொடுத்திருந்தால் அவரிடம் ஏதாவது ஆவணம் எழுதி வாங்கியிருப்பேன் என்றாலும், இந்த வழக்கு கடன் எதிரிக்கு கொடுக்கப்பட்ட கடன் இல்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் 13.02.2025 ம் தேதி எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் அவரிடம் பாதுகாப்புக்காக பாண்டோ, கடனுறுதி சீட்டோ எழுதி வாங்கியிருப்பேன் என்றாலும் சரியல்ல. 601512, 601513, 601514 ஆகிய மூன்று கசோலைகளும் எதிரி தண்டபானியிடம் கொடுத்த காசோலைகள் என்றால் சரியல்ல.

11. என்னிடம் காட்டப்படுவது வங்கி ஸ்டேட்மென்ட் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வங்கி ஸ்டேட்மென்ட்டில் இந்த வழக்கு காசோலைக்கு முன்பின் உள்ள காசோலைகள் அனைத்தும் 01.05.2019 முதல் 30.05.2019–க்குள் பணமாக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்லக்கூடிய தேதியில் நான் எதிரிக்கு அவ்வளவு பெரிய தொகை கொடுக்கவில்லை என்றாலும், அந்த தொகையை கொடுக்க எனக்கு வருமானமோ, வசதியோ இல்லை என்றாலும் சரியல்ல. காசோலைகளில் பொய்யாக என் பெயரை நிரப்பி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றாலும், நான் பொய்யாக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**